**செப்டம்பர் – 12**

# TNPSC துளிகள்

- எத்தனால், மெத்தனால், பயோ-டீசல் மற்றும் சிஎன்ஜி (CNG) போன்ற மாற்று எரிபொருளில் இயங்கும் பேருந்துகள், வணிக ரீதியிலான கார்கள், கைவண்டிகள் போன்றவைகளை இயக்க அனுமதி பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும் என்று மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.
- இராமேசுவரத்தில் குறைந்த விலையிலான காற்றின் தரத்தை கண்காணிக்கும் அமைப்பை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு மெட்ராஸ் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் உதவ இருக்கிறது. இந்த அமைப்பானது மெட்ராஸ் இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தில் உள்ள காற்று ஆராய்ச்சி ஆய்வகத்துடன் இணைக்கப்பட்டுள்ள தரவுடன் விவேகானந்தா கேந்தராவில் ஏற்படுத்தப்படவிருக்கிறது.
    - ஈரப்பதம், வெப்பநிலை, கார்பன்-டை ஆக்ஸைடு, கார்பன் மோனாக்ஸைடு ஆகியவற்றுடன் வளிமண்டலத்தில் உள்ள PM10 மற்றும் PM2.5 நிலைகள் ஆகியவற்றின் தகவல்களை இது அளிக்கும்.
- இந்தியாவின் பீகார் மற்றும் நேபாளம் ஆகியவற்றுக்கு இடையேயான முதலாவது பேருந்து சேவையை பாட்னாவில் பீகார் முதல்வர் நிதீஷ்குமார் துவக்கி வைத்தார்.
- “இந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிகளில் பெண்கள்” என்ற விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியின் (WIFT - Women in Film and Television) போது ஐஸ்வர்யா ராய் பச்சான் கௌரவிக்கப்பட்டார்.
    - பாலிவுட் மற்றும் கோலிவுட்டில் பெண்களின் திறமைகளை கௌரவிப்பதற்காக இவ்விருது ஏற்படுத்தப்பட்டது.
- ஹைதராபாத் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சமீர் வெர்மா பட்டம் பெற்றார். ஆண்கள் இரட்டையர் பிரிவில் சத்விக்சாய்ராஜ் ரான்கிரெட்டி மற்றும் சிரக் செட்டி ஆகியோரும் பட்டம் பெற்றனர்.
- கிரிகிஸ்தான் குடியரசு நாட்டுக்கான அடுத்த இந்தியத் தூதுவராக அசோக் அமிதாப் திமிரி நியமிக்கப்பட்டுள்ளார்.
- அஸர்பைஜான் குடியரசு நாட்டுக்கான இந்தியத் தூதுவராக வன்லால்வானா நியமிக்கப்பட்டுள்ளார்.
- ஆப்கானிஸ்தானின் காபூலில் இந்தியா, ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளின் முதல் முத்தரப்பு சந்திப்பு நடைபெற்றது.
- எதிர்கால மாற்றத்தன்மை கொண்ட செயற்கை நுண்ணறிவிற்கான சர்வதேச மையத்தை அமைப்பதற்காக நிதி ஆயோக், இன்டெல் மற்றும் டாடா அடிப்படை ஆய்வு நிறுவனம் (TIFR) ஆகியவை கூட்டு பணியாற்றுகின்றன.
    - இந்த கூட்டிணைவானது முக்கிய பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அடிப்படை மற்றும் பயன்பாட்டு ஆராய்ச்சி, புதுமை மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மத்திய இரயில்வே அமைச்சகமானது ரயில் சயோக் வலைப்பக்கத்தை தொடங்கியுள்ளது. இது இரயில் நிலையங்களில் பெறுநிருவனங்களுக்கும் பொதுத்துறை நிறுவனங்களுக்கும் மேம்பட்ட வசதிகளை பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு நிதிமூலம் அமைப்பதற்கான மேடையை வழங்குகிறது.

- பரத்பூரில் பாரம்பரிய உடைமைகளை பேணிகாப்பதற்காகவும், பாரம்பரிய சுற்றுலாவை மேம்படுத்துவதற்காகவும் மாநாடு ஒன்றை நடத்த இராஜஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது. இது இந்திய பாரம்பரிய தங்கும் விடுதி கூட்டிணைவு (IHHA - Indian Heritage Hotels Association) மூலம் ஏற்பாடு செய்யப்படவுள்ளது.
- செயற்கை நுண்ணறிவு (AI) திறன்மூலம் சுற்றுச்சூழல் சவால்களை தீர்க்க மக்களையும் மற்ற நிறுவனங்களையும் மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட "பூமிக்காக செயற்கை நுண்ணறிவு" (AI for Earth) திட்டத்திற்கு நிதி பெறுபவராக ஏழு பேரை மைக்ரோசாப்ட் நிறுவனம் தேர்வு செய்துள்ளது.
    - அமெரிக்கா மற்றும் கனடாவுக்கு அடுத்ததாக பூமிக்காக செயற்கை நுண்ணறிவிற்கு அதிகபட்ச கொடை பெறும் நாடாக இந்தியா மாறியுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டின் புதிய தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கொள்கை

- புதிய தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கொள்கை 2018-ஐ தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.
- இக்கொள்கை தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்களின் முதலீட்டாளர்களின் தேவைகள், நிலையான நிர்வாக ஊக்கத்தொகைகளை வழங்குவதன் மூலம் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் மற்றும் புதிதாக தொழில் தொடங்குவோரின் தேவைகள், நிதி உதவிகள், மூலதன மானியங்கள், வரி விலக்குகள், சிறப்பு சலுகைகள் ஆகியவற்றில் உள்ள பிரச்சனைகளைக் களையும்.
- மேலும் புதிதாக தொழில் தொடங்குவோர் மையங்கள் மற்றும் ஆராய்ச்சி மையங்கள் அமைப்பதற்கு விதிகள் உள்ளன.
- மேலும் இக்கொள்கையின் ஒரு பகுதியாக சம்பந்தப்பட்ட முகவர்களிடமிருந்து பசுமைத் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் ஒற்றைச் சாளர வசதிகளுக்காக முன்கூட்டியே அனுமதி பெறுவதை ஊக்குவிக்கிறது.

# தேசியச் செய்திகள்

## Bee திட்டம்

- யானைகள் இரயில் தண்டவாளங்களைக் கடக்கும்போது ஏற்படும் விபத்துகளைக் தடுப்பதற்காக இந்திய இரயில்வே ஆனது 'Bee திட்டம்' என்ற புது முயற்சியைத் தொடங்குகிறது.
- இத்திட்டத்தின்படி இரயில் தண்டவாளங்களுக்கு அருகில் தேனீக்கள் மொய்ப்பதைப் போன்ற சலசலப்பு ஒலியை ஏற்படுத்தும் சாதனம் பொருத்தப்படும்.
- வடகிழக்கு எல்லை இரயில்வேயில் பெரும் வெற்றி பெற்று நடைமுறையில் இருக்கும் 'Bee' திட்டமானது 2017 ஆம் ஆண்டு நவம்பரில் தொடங்கப்பட்டது (NFR - Northeast Frontier Railways).

## எச்ஐவி மற்றும் எய்ட்ஸ் (தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல்) சட்டம், 2017

- சுகாதாரம் மற்றும் குடும்ப நலவாழ்வு அமைச்சகமானது மனித ஏமக்குறைப்பு நச்சுயிரி (HIV - Human Immuno deficiency Virus) மற்றும் ஏமக்குறை நோய் (தடுத்தல் மற்றும் பாதுகாத்தல்) சட்டம், 2017 ஆனது செயல்படுத்தப்படுவதை அறிவித்துள்ளது.
- இது வரலாற்றுச் சிறப்புமிக்க மசோதாவாகும். இது எச்.ஐ.வி உடன் வாழும் ஒரு நபருக்கு வேலை வாய்ப்பு, சுகாதாரப் பராமரிப்பு, சேவைகள், கல்விச் சேவைகள், பொது வசதிகள், சொத்துரிமை, பொது அலுவலகங்கள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள பாகுபாடுகளைப் பற்றி புகார் தெரிவிக்க உதவுகிறது.
- இச்சட்டம் அனைத்து எச்.ஐ.வி/எய்ட்ஸ் நோயாளிகளுக்கு ரெட்ரோவைரஸ் எதிர்ப்பு சிகிச்சையை சட்ட உரிமையாக ஏற்படுத்தியுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## ஆப்பிரிக்காவுடன் புதிய டிஜிட்டல் இணைப்பு

- இந்தியாவின் ஆப்பிரிக்காவுடனான அணுகுமுறையின் ஒரு பகுதியாக, இரு நாடுகளுக்கு இடையே மின்னணு வலையமைப்பை நிறுவுவதற்காக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகமானது இந்திய தொலைத்தொடர்பு ஆலோசனை (TCIL - Tele Communications Consultants India Ltd) நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
- மின்னணு வித்யபாரதி மற்றும் மின்னணு ஆரோக்கியபாரதி வலையமைப்புத் திட்டமானது இரு நாடுகளுக்கு இடையே டிஜிட்டல் இணைப்பை அளிக்கும்.
- இத்திட்டத்தின் நோக்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள் மற்றும் சிறப்பு மருத்துவமனைகளை ஆப்பிரிக்காவின் கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளுடன் இணைப்பதன் மூலம் தரமான தொலைதூர கல்வி மற்றும் தொலைதூர மருத்துவம் அளிப்பதாகும்.

## நோமாடிக் எலிபெண்ட் பயிற்சி - 2018

- மங்கோலியாவின் உலன்பட்டரில் உள்ள மங்கோலிய ஆயுதப் படையின் ஐந்து குன்றுகள் பயிற்சி மையத்தில் இந்தியா மற்றும் மங்கோலியா ஆகிய நாடுகளுக்கிடையேயான 13வது கூட்டுப் பயிற்சியான நோமாடிக் எலிபெண்ட் நடைபெற்றது.
- ஒவ்வொரு ஆண்டும் இரு நாடுகளுக்கு இடையே நடைபெறும் இப்பயிற்சியானது 2006 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது.
- இந்திய இராணுவம் மற்றும் மங்கோலிய இராணுவம் ஆகியவற்றின் பங்களிப்பை வலுப்படுத்துவதற்காக இப்பயிற்சி நடத்தப்படுகிறது.

## இந்தியா மற்றும் வங்க தேசம் - கூட்டுத் திட்டங்கள்

- தற்பொழுது நடைமுறையில் இருக்கும் இரயில்வே பிரிவின் மின் இணைப்பை

புனரமைப்பது தொடர்பான 3 திட்டங்களை இந்தியா மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகள் கூட்டாக தொடங்கி வைத்தது.

- வங்கதேசத்தில் நடைபெறவிருக்கும் இத்திட்டத்தை இந்திய பிரதம அமைச்சர், வங்க தேச பிரதம அமைச்சர் மற்றும் மேற்கு வங்காளம், திரிபுரா ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் தொடங்கி வைத்தனர்.
  - வங்க தேச இரயில்வேயின் குலரா-ஷாபஸ்பூர் பிரிவின் புனரமைப்பு
  - இந்தியாவிலிருந்து வங்க தேசத்திற்கு 500 மெகா வாட் திறன் கூடுதல் மின் இணைப்பு.
  - அகாரா - அகர்தலா இரயில்வே இணைப்பு

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## அப்ஸரா - U

- டிராம்பேவில் உள்ள பாபா அணு ஆராய்ச்சி மையத்தில் 2009 ஆம் ஆண்டில் பழுதுபார்ப்பதற்காக நிரந்தரமாக மூடப்பட்ட இந்தியாவின் பழமையான அணு உலையான 'அப்சரா' அணு உலை உயர் திறனுடன் மீண்டும் செயல்பாட்டுக்கு வந்தது.
- இந்த புதுப்பிக்கப்பட்ட அணு உலையின் பெயர் அப்ஸரா - மேம்படுத்தப்பட்டது (Apsara - U) ஆகும்.
- இது குறைவான செறிவூட்டப்பட்ட யுரேனியத்தால் செய்யப்பட்ட தகடு வகையிலான சிதைவு எரிபொருள் கூறுகளை பயன்படுத்துகிறது. இது உள்நாட்டுத் தொழில்நுட்பத்திலேயே ஏற்படுத்தப்பட்டது.
- இது மருத்துவ பயன்பாட்டிற்காக உள்நாட்டு உற்பத்தி அல்லது ரேடியோ - ஐசோடோப்புகளை 50 சதவீதம் அதிகப்படுத்தும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## காலநிலை நடவடிக்கை குறித்த உலகளாவிய உச்சி மாநாடு

- அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோவில் காலநிலை நடவடிக்கை குறித்த உலகளாவிய உச்சி மாநாடு நடைபெறுகிறது.
- இம்மாநாடானது பரந்த மற்றும் மிகவும் செயலூக்கம் உடைய கடமைகள், காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை குறைப்பதற்காகவும் மற்றும் பாரீஸ் ஒப்பந்தத்தின் நோக்கங்களை அடையவும் ஒரு தொடக்கப் புள்ளியாக செயல்படும்.
- இது கீழ்க்கண்ட ஐந்து முக்கிய பகுதிகளில் காலநிலை நடவடிக்கைகளை ஊக்குவிக்கின்றது.
  - ஆரோக்கியமான எரிசக்தி அமைப்புகள்
  - உள்ளடங்கிய பொருளாதார வளர்ச்சி
  - நிலையான உயிரினக் குழுமம்
  - நிலம் மற்றும் பெருங்கடல் செயல் முகமை
  - மாற்றத்திற்கான காலநிலை முதலீடுகள்

# மாநிலச் செய்திகள்

## சாலை விபத்து தகவல் மேலாண்மை அமைப்புகள் - RADMS

- நாட்டில் ஜம்மு காஷ்மீர் மாநிலம் சாலை விபத்துகள் குறித்து தரமான மற்றும் துல்லியமான தகவல்களுக்காக மென்பொருளை பயன்படுத்தும் மூன்றாவது மாநிலமாகும்.
- சாலை விபத்து தகவல் மேலாண்மை அமைப்பு (RADMS - The Road Accident Data Management System) என்பது சாலை விபத்து தகவல்களின் தானியங்கு மென்பொருள் அடிப்படையிலான தீர்வாகும்.
- RADMS என்பது சாலைகளில் உள்ள குழிகள், தவறான ஓட்டுநர் முறைகள், சாலை கட்டமைப்பு, வாகன குறைபாடுகள், சாலை வகைகள், பொருட்களுக்கு ஏற்படும் பாதிப்பு, பணிமிகுப்பு பிரச்சனைகள், ஓட்டுநர் பிரச்சனைகள் மற்றும் சாலை விபத்தை ஏற்படுத்தும் இதர பிரச்சனைகள் ஆகியவற்றை அடையாளப்படுத்தும் புவியியல் தகவல் முறைமை ஆகும்.
- இதற்குமுன் தமிழ்நாடு மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் RADMS -ஐ அறிமுகப்படுத்தியது.

## நிலமதிப்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் முதலாவது பிராந்திய செயல்முறை

- புனேவில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சர் (சுயாதீன பொறுப்பு) RERA (நிலமதிப்பு ஒழுங்குமுறை (ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி) சட்டம்) என்ற அமைப்பின் முதலாவது பிராந்திய செயல்முறையை தொடங்கி வைத்தார்.
- நில மதிப்பு ஒழுங்குமுறை ஆணையம் (RERA - Real Estate Regulatory Authority) நில மதிப்புத் துறையில் தகவல்களை பகிர்ந்து கொள்வதற்கான நிகழ்நேர அமைப்பை உருவாக்குவதன் மூலம் நுகர்வோர்களை பாதுகாத்தல் என்ற நோக்கத்துடன் 2016-ல் தொடங்கப்பட்டது.
- இது மாநிலங்கள் ஒழுங்குமுறை மற்றும் மேல்முறையீட்டு ஆணையங்களை ஏற்படுத்த அனுமதியளிக்கிறது.
- RERA - ன் விதிகளை செயல்படுத்தும் மாநிலங்களில் மஹாராஷ்டிரம் முதலாவது மாநிலமாகும்.
- மஹாராஷ்டிரா மாநில அரசானது 'MahaRERA' என்று பிரபலமாக அழைக்கப்படும் மஹாராஷ்டிரா நில மதிப்பு ஒழுங்குமுறை ஆணையத்தை ஏற்படுத்தியுள்ளது.

- - - - - - - - - - - - - -